ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 49 — 1973 මාර්තු 02 වැනි සිකුරාදා — 1973.03.02

49 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 02 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு தொகுதியும் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யப்படுவதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 89 | வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| பதவிகள்—வெற்றிடம் | — | வரவு செலவுத் திரட்டுகள் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | 90 | ஆதன விற்பனைகள் | — |
| துணை விதிகள் | 91 | வீதிச் செய்நிருமாண அறிவித்தல்கள் | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் | 94 |


**கவனிக்க.**—இரத்தினக்கல் (மன்னிப்பு) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ந் திகதிய ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

தெஹியோவிற்றப் பட்டின சபை

பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டம்

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 3 ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட விதி.

பீலிக்ஸ். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 12 ந் உ.

**விதி**

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு 1967 யூலை 13 ஆந் தேதிய 14,757 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதியினால் கடைசியாகத் திருத்தப்பட்டபடியான 1919, ஏப்பிரல் 4 ந் தேதிய 7,004 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட விதிகள் தெஹியோவிற்றப் பட்டின சபையின் நிருவாக எல்லைகளுக்குள் உள்ள பிரதேசத்துடன் அவை சம்பந்தப்பட்ட வரையில், அவற்றின் அ3 என்னும் விதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய விதியை இதுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

"அ. 3 (1) பணம் செலுத்துவதன் பேரில் ஆட்கள் அனுமதிக்கப்படும் ஏதேனும் பகிரங்க அரங்காட்டத்துக்குக் கட்டடம் எதனையும் உபயோகிப்பதற்குரிய உரிமமொன்றுக்கான விண்ணப்பகாரர் ஒருவர், அத்தகைய உரிமம் அவருக்கு வழங்கப்படுவதற்கு முன்னர்ப் பின்வரும் விகிதங்களில் கணிக்கப்பெற்ற கட்டணமொன்றைச் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்."

| | ஒரு நாளைக்கு ரூ. ச. | ஒரு மாதத்துக்கு ரூ. ச. | திசம்பர் 31 அன்று முடிவடையும் ஒரு வருடத்துக்கு ரூ. ச. |
|---|---|---|---|
| ஆசன வசதி செய்யப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை 199 க்கு மேற்படாதவிடத்து | 3 0 | 30 0 | 150 0 |
| ஆசன வசதி செய்யப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை 199 க்கு மேற்பட்டு ஆனால் 499 க்கு மேற்படாதவிடத்து | 5 0 | 60 0 | 200 0 |
| ஆசன வசதி செய்யப்பட்டிருக்கும் ஆட்களின் எண்ணிக்கை 499 க்கு மேற்படுமிடத்து | 10 0 | 100 0 | 300 0 |

3–11—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5, 10 ஆகிய பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் மொனருகலை மாவட்டத்தின் சியம்பலாந்துவைப் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவில் சியம்பலாந்துவை, தொம்பகஹவெல ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களை அமைப்பது சம்பந்தமாக 1972, ஒற்றோபர் 9 இன் 28/4 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை, இக் கட்டளை வாயிலாக நீக்கஞ் செய்கிறேன்.

எப். ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
13.2.1973.

3–16—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

**சிலாபப் பட்டினம்**

நகர சபைகள் கட்டளைச் சட்டம்

**1973 க்கான ஆதன வரி**

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 160 ஆம் பிரிவின் கீழும் அப்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வழங்கிய அங்கீகாரத்துடனும் விசேட ஆணையாளரினால் விதிக்கப்படக் கூடியதாய அத்தகைய வரையறைகளுக்கும் தகைமைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக சிலாபப் பட்டினத்தினுள் அமைந்துள்ள நிலையான ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்குப் பதினைந்து வீதமானதும் முறையே மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சம தொகைகளாகச் செலுத்தப்படற்பாலதான ஒரு ஆதன வரியை 1973 ஆம் ஆண்டுக்கு சிலாபப்பட்டினத்தின் விசேட ஆணையாளர் விதித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பீ. சிறிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
31.1.1973.

3–10—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

**விசேட ஆணையாளர் பணிமனை**

கஹவத்தைப் பட்டினம்—பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

**1973 ம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி**

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக்கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினாற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் இயைபாக கஹவத்தைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செப்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1973 ம் ஆண்டுக்கு கஹவத்தைப் பட்டினத்தின் விசேட ஆணையாளர் விதித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யு. ஈ. வீ. எஸ். டி அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
6.2.1973.

3–69—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**உள்ளூராட்சிச் சேவை**

வேலைகள் / நீர்வேலைகள் அத்தியட்சகர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

மேற்படி வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை கீழ்க்காணும் உத்தியோகத்தர் முடித்துள்ளாரென இத்தால் அறியத்தரப்படுகிறது.

டபிள்யூ. டி. சுமணசிறி—கொழும்பு மாநகர சபை

எட்கா பர்னந்து,
செயலாளர்,
உ. ஆ. செ. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு,
24.1.73.

3–19—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

**உள்ளூராட்சிச் சேவை**

பொது சுகாதார பரிசோதகர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை—1972

கீழ்க்காணும் பரீட்சார்த்தி மேற்படி வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை முடித்துள்ளார்.

1. யூ. ஜீ. றொபின்சன்

கீழ்க்காணும் பரீட்சார்த்திகள் "செய்முறை, வாய்மொழிப் பரீட்சை" என்ற பாடங்களில் மாத்திரம் சித்தியடைந்துள்ளார்கள்.

1. ஈ. எ. நந்தசேகர—வாய்மொழியும் செய்முறைப் பரீட்சையும்.
2. எச். டபிள்யூ. பியசேன—வாய்மொழியும் செய்முறைப் பரீட்சையும்.

எட்கா பர்னந்து,
செயலாளர்,
உ. ஆ. செ. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு,
24.1.73.

3–20—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

# துணை விதிகள்

எல். டி.—பி. 7/66.

**பதுளை மாநகர சபை**

*மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்*

(252 ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின் கீழ் பதுளை மாநகர சபையினுல் ஆக்கப்பட்டதும் அக்கட்டளைச் சட்டத்தின் 268 ம் பிரிவின கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்டு தேசீயப் பேரவையினுல் உறுதிப்படுத்தப்பட்டதுமான துணைவிதி.

பீ. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவலகள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 19 ந உ.

**முறைச்சந்தைகள் தொடர்பான துணைவிதி**

(252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின் கீழ் பதுளை மாநகரசபையால் ஆக்கப்பட்டதும் 1970 மார்ச்சு 5 ந் தேதிய 14,896 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப் பட்டதுமான துணைவிதிகள், அவற்றின் 1 ம் துணைவிதியில் " போயா நாள் " எனுஞ் சொற்றெடருக்குப் பதிலாக " ஞாயிற்றுக்கிழமை " எனுஞ் சொற்றெடரை இடுவதன் மூலம் இத்தால் திருத்தஞ் செய்யப் படுகின்றது.

3–172—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

**காலி மாநகர சபை**

*மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்*

(252 ம் அதிகாரமாம்) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின் கீழ் காலி மாநகர சபையாலாக்கப்பட்டு, அக் கட்டளைச் சட்டத்தின் 268 ம் பிரிவினுல் அன்னுருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு தேசிய அரசுப் பேரவையினுல் உறுதிப்படுத்தப்பட்ட துணைவிதிகள்.

பீ. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள் நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973.2.12.

**பொது நூலகம்பற்றிய துணைவிதிகள்**

1. காலி மாநகர சபை நிறுவி நடத்தும் பொது நூலகத்தில் பின் வருவன அடங்கியிருக்கும் :—

(அ) இரவல் கொடுக்கும் நூலகமொன்று ;

(ஆ) ஆதார நூலகமொன்று ;

(இ) வாசகசாலையொன்று ;

(ஈ) சிறுவர் நூலகமொன்று.

2. (1) பொது நூலகத்தின் பொது நிருவாகம், பின்வருவோரைக் கொண்ட (இதன் பின்னர் " குழு " எனக் குறிப்பிடப்படும்) நூலகக் குழுவசம் ஒப்படைக்கப்படும் :

(அ) காலி மாநகர சபையின் அப்போதைய மாநகர முதல்வர் ;

(ஆ) சபையின் செயலாளர், அவர் குழுவின் உத்தியோகப்பற்றற்ற செயலாளராகக் கடமையாற்றுவார் ;

(இ) சபையினுல் தெரிவு செய்யப்படக்கூடிய காலி மாநகர சபையின் நான்கு பேருக்கு மேற்படாத வேறு உறுப்பினர்கள் ;

(ஈ) காலி மாநகர சபையினுல் தெரிவு செய்யப்படும் மாநகரப் பிர தேசத்தைச் சேர்ந்த பிரபல குடிமக்கள் ஏழுபேர்.

(2) பொது நூலகத்திற்குப் பொறுப்பாகவுள்ள நூலகப்பொறுப்பாளர் அந்நூலகத்தில் ஒழுங்கை நிலைநாட்டுதற்குக் கடமைப்பட்டவராக இருப் பார்.

3. (1) காலி மாநகர சபையின் மாநகர முதல்வர் குழுவின் உத்தி யோகப்பற்றற்ற தலைவராக்விருப்பதோடு குழுவின் எல்லாக் கூட்டங் களிலும் அவரே தலைமை வகிப்பார். எக்கூட்டத்திலாவது மாநகர முதல்வர் சமூகமாயிராதவிடத்து அக்கூட்டத்தில் சமூகமளித்திருக்கும் ஏனைய உறுப்பினர்கள் அதற்காக தெரிவு செய்யப்படக்கூடிய குழுவின் உறுப்பினர்களில் ஒருவர் அக்கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

(2) எக்கூட்டத்திலாவது தலைமை வகிக்கும் உறுப்பினருக்கு ஒரு மூல வாக்குடன் எவ்விடயத்தின் பேரிலாவது அளிக்கப்பட்ட வாக்குகள் சம்மானமையாகவிருப்பின், ஒரு தீர்ப்பு வாக்கும் உண்டு.

4. 3 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குறைநிறைவெண் இருந்தா லன்றி குழுவின் எக்கூட்டத்திலும் கருமமெதுவுமாற்றக்கூடாது.

5. குழு அவசியமானதெனக் கருதும் நிபந்தனைகளுக்கமைவாக நூலகத்தின் எப்பாகத்தையேனும் எவரையும் உபயோகிக்க அனுமதிப்ப தற்கோ அல்லது நூலகம் சம்பந்தமான இத்துணைவிதிகளில் எவற்றை யேனும் மீறி நடந்தமைக்காக எவரும் நூலகத்தின் எப்பாகத்தையும் உபயோகிப்பதை மறுக்கவோ அதற்கு அதிகாரமுண்டு.

**இரவல் கொடுக்கும் நூலகம்**

6. (1) எவரும், அவர்—

(அ) 12 வயதுக்குக் குறையாதவராக,

(ஆ) படித்தவராக,

(இ) மாநகர எல்லைகளுக்குள் குடியிருப்பவராக அலுவலகமோ அல் லது தொழிலகமோ உடையவராக,

(ஈ) ஒரு புத்தகத்தை எடுத்துச் செல்வதற்கு 5 ரூபாயும் இரண்டு புத்தகங்களை எடுத்துச் செல்வதற்கு 10 ரூபாவுமாக நூலகப் பொறுப்பாளரிடம் கட்டுகிறவராகவும் ;

(உ) 25 ரூபாவுக்குக் குறையாத வாடகை தரும் ஒரு வீட்டின் சொந்தக் காரர் அல்லது குடியிருப்பாளர் ஒருவரால் சிபாரிசு செய்யப்பட்டவ ராகவும் ; இருந்தாலன்றி, இரவல் கொடுக்கும் நூலகத்தின் ஒரு உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்.

(2) இரவல் கொடுக்கும் நூலகத்தின் ஒரு உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்படவிரும்பும் ஒவ்வொருவரும் நூலகப் பொறுப்பாளரிடமி ருந்து பெறக்கூடியதான படிவத்தில் அதன் பொருட்டு விண்ணப்பம் செய்தல் வேண்டும் ; அத்தகைய விண்ணப்பம் பின்வருபவர்களில் எவராவது ஒருவரால் பொறுப்புறுதி செய்யப்படுதல் வேண்டும் :

(அ) தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் ஒருவர்

(ஆ) காலி மாநகர சபை உறுப்பினர் ஒருவர்

(இ) குழுவின் உறுப்பினர் ஒருவர்

(ஈ) சமய குரவர் ஒருவர்

(உ) வைத்திய அல்லது சட்ட தொழில்புரியும் ஒருவர்

(ஊ) சமாதான நீதவான் ஒருவர்

(எ) வருடாந்த சிவில் நிரலில் பெயர் காணப்படும் அரசாங்க ஊழியர் ஒருவர்

(ஏ) மகாவித்தியாலயம் ஒன்றின் அதிபர் ஒருவர்

(ஐ) நூலகமிருக்கும் அதே உள்ளூரதிகார சபையின் நிருவாக எல்லைகளுக்குள் வதிபவரும் 1,500 ரூபாவுக்குக் குறையாத நிகழ்வருட அடிப்படைச் சம்பளமாகப் பெறுபவருமான உள்ளூ ராட்சிச் சேவை ஊழியர் ஒருவர்.

(3) பொறுப்புறுதி செய்பவர், உறுப்பினர் உள்ளாகும் சகல அபரா தங்களுக்கும் புத்தகங்கள் வேறு வாசிப்புச் சாதனங்களாதியனவற்றின் இழப்புகளுக்கும் பொறுப்பாளியாகவிருப்பார் ; அத்துடன் இரண்டு உறுப்பினர்களுக்கதிகமானவர்களுக்கு ஒருவர் பொறுப்புறுதி செய் யக்கூடாது.

(4) முற்போந்த பந்தியின்படி ஒரு விண்ணப்பத்துக்குப் பொறுப்புறுதி யளிக்கத் தகுதி பெற்ற ஒருவர் தமது விண்ணப்பத்தைப் பொறுப்புறுதி செய்துகொள்ளவேண்டியதில்லை.

7. இரவல் கொடுக்கும் நூலகத்தின் உறுப்பினராக ஏற்றுக்கொள் ளப்பட்ட ஒவ்வொருவருக்கும் அவர் 5 ரூபா கட்டுகையில் ஒரு சீட்டும் 10 ரூபா கட்டுகையில் இரண்டு சீட்டுக்களும் நூலகப் பொறுப்பாளரால் வழங்கப்படும். அத்தகையவர் அச்சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு புத்தகம் இரவலாக்ப் பெற அருகதைபெறுவார்.

8. தமக்கு வழங்கப்பட்ட சீட்டொன்றின் பேரில் நூலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும் எப்புத்தகத்துக்கும் இரவல் கொடுக்கும் நூலகத் தின் உறுப்பினரே பொறுப்பாளியாவார்.

9. 7 ம் துணைவிதியின்படி தமக்கு வழங்கப்பட்ட ஒரு சீட்டை இரவல் கொடுக்கும் நூலகத்தின் உறுப்பினர் ஒருவர் இழக்குங்கால் அவ் விழப்பைப்பற்றி அவர் உடனடியாக நூலகப் பொறுப்பாளருக்கு அறி வித்தல் வேண்டும்; அச்சீட்டிற்காக இரவல் கொடுக்கும் நூலகத்தி

லிருந்து புத்தகமெதுவும் இரவலாகப் பெறப்படவில்லையென நூலகப் பொறுப்பாளர் திருப்தியடைந்தால், அவ்வுறுப்பினர் ஒவ்வொரு படிச்சீட்டுக்காகவும் ஐம்பது சதம் செலுத்துவதன் பேரில் அவர் அத்தகையவருக்கு ஒரு படிச்சீட்டு வழங்கலாம். சீட்டின் இழப்புப்பற்றித் தமக்கு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து குறைந்தது முப்பது நாட்கள் கொண்ட காலமாவது கடக்கு முன்னர் நூலகப் பொறுப்பாளர் அத்தகைய படிச்சீட்டை வழங்கலாகாது. ஆயினும், படிச்சீட்டொன்று வழங்குவது உறுப்பினர் ஒருவரது மூலச்சீட்டுக்காக எப்போதாவது எடுத்துச்செல்லப்படும் புத்தகங்களுக்கு அவர் பொறுப்பாகவிருப்பதிலிருந்து அவரை விடுவிக்கமாட்டாது.

10. இரவல் பெறும் உறுப்பினர் தமது வசிப்பிடம் அல்லது விலாசம் எதனையும் மாற்றும் சந்தர்ப்பத்தில் அதனைப்பற்றி நூலகப் பொறுப்பாளருக்கு அம்மாற்றம் நிகழ்ந்த ஒரு வாரத்துக்குள் நூலகப் பொறுப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

அங்ஙனம் அறிவியாவிடில் நூலகப் பொறுப்பாளர் உசிதமெனக் கருதுகின்றவாறு இரவல் பெறுபவரின் கட்டுப்பணமும் சீட்டும் பறிமுதல் செய்யப்படுதலும், அதனை மீண்டும் வழங்காதிருத்தலுமாகிய அபராதத்திற்குட்படுவார்.

11. மாநகர எல்லைகளுக்குள் வசியாதொழியும் இரவல் பெறுவோர், அவர்களின் சீட்டுக்களை அழித்துவிடுதற்பொருட்டு அவற்றை நூலகத்துக்குத் திருப்பிக் கொடுத்துவிடுமாறு வேண்டப்படுகின்றனர். அங்ஙனம் செய்யாதவிடத்து அவர்களின் பெயரில் எடுக்கப்படும் எப்புத்தகத்துக்கும் அவர்களே பொறுப்பாளிகளாகக் கொள்ளப்படுவர்.

12. உறுப்புரிமை ஒவ்வொருவருடமும் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய புதுப்பிப்புக்காகப் புதிதாகக் கட்டுப்பணம் எதும் செலுத்தப்படவேண்டியதில்லையாயினும், 6 (2) ம் துணைவிதியின் (அ) முதல் (ஐ) வரை சொல்லப்பட்டவர்களில் ஒருவரால் பொறுப்புறுதி செய்யப்பட்ட பெயரளவிலான விண்ணப்பப்பத்திரத்தை மாத்திரம் நிரப்பியனுப்புதலோ போதியதாகும்.

13. இரவல் கொடுக்கும் நூலகத்திலிருந்து ஒரு உறுப்பினர் இரவலாகப் பெற்ற எப்புத்தகமும் அதனைப் பெற்ற திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் நூலகப் பொறுப்பாளரிடம் திருப்பிக்கொடுக்கப்படல் வேண்டும். அத்தகைய புத்தகம் வேறு யாரேனும் உறுப்பினருக்குத் தேவைப்படாதிருக்குமாயின் அதனை மேலும் பதினான்கு நாட்களுக்கு அவ்வுறுப்பினருக்கு நூலகப் பொறுப்பாளர் நீடித்துக்கொடுக்கலாம். தாமாகவோ, அல்லது பொறுப்புறுதியளித்தவர் மூலமாகவோ புத்தகங்களை நூலகத்துக்குக் கொணர்வதன் மூலம் அவற்றை அங்ஙனம் புதுப்பித்துக்கொள்ளலாம்.

14. இரவல் கொடுக்கும் நூலகத்திலிருந்து தாம் இரவலாகப்பெற்ற புத்தகமெதையும் 13 ம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட பதினான்கு நாட்களுக்குள் நூலகப் பொறுப்பாளரிடம் திருப்பிக்கொடுப்பதற்குத் தவறும் ஒரு உறுப்பினர் அப்புத்தகம் கொடுக்கப்படவேண்டிய திகதியைக் கடந்த ஒவ்வொரு நாளுக்கும் 10 சதம் வீதம் அபராதமாகச் செலுத்துதற்கு பாத்திரராவார்.

15. இரவல் கொடுக்கும் நூலகத்திலிருந்து தாம் இரவலாகப்பெற்ற புத்தகமெதையும் உறுப்பினர் ஒருவர் 30 நாட்களுக்குள் திருப்பிக் கொடுக்கத் தவறுங்கால், இரவல் பெற்றவரிடமிருந்தோ அல்லது பொறுப்புறுதி செய்தவரிடமிருந்தோ அப்புத்தகத்தை அல்லது நூலக அதிகாரிகளின் உசிதப்படி அதன் பெறுமதியையும், காலங் கடந்து வைத்திருந்தமைக்காக 14 ம் துணைவிதியின்படி அப்புத்தகத்துக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணங்களையும் பெறுவதற்குச் சட்ட நடவடிக்கையெடுத்துச் செலவுகளுடன் அவற்றை அறவிடுதற்கு நூலக அதிகாரிகளுக்குப் பாத்தியதையுண்டு.

16. இரவல் தரும் நூலகத்திலிருந்து தாம் இரவலாகப் பெற்ற எப்புத்தகத்தையும் எவ்வுறுப்பினரும் எவ்வகையிலாவது பழுதுபடுத்தவோ அல்லது ஊனப்படுத்தவோ கூடாது. புத்தகங்களைத் துப்பரவாக வைத்திருக்குமாறு உறுப்பினர்கள் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர். அவர் தாள்களை மடக்கவோ அல்லது பென்சிலினாலோ அல்லது வேறெதனாலுமோ அதில் அடையாளமிடுதலோ கூடாது.

17. இரவல் தரும் நூலகத்திலிருந்து தாம் இரவலாகப் பெற நினைக்கும் புத்தகமெதிலுமுள்ள பழுதை அல்லது ஊனத்தை நூலகப் பொறுப்பாளரின் கவனத்துக்குக் கொணர்தல் ஒவ்வொரு உறுப்பினரதும் கடமையாகும். அத்தகைய பழுதையோ அல்லது ஊனத்தையோ அவர் நூலகப் பொறுப்பாளரின் கவனத்துக்குக் கொணரத் தவறுவராயின் அத்தகைய புத்தகம் எவ்விதப் பழுதும் அல்லது ஊனமும் இல்லாமலே அவருக்கு வழங்கப்பட்டதாகக் கொள்ளப்படும்.

18. உறுப்பினரொருவர் திருப்பிக்கொடுத்த புத்தகமெதுவும் (நியாயமான உபயோகத்தினாலன்றி) அழுக்குற்றிருப்பதாக, அதில் எழுதி, அடையாளமிட்டு அல்லது வேறு வகையில் அது ஊனப்படுத்தப்பட்டிருப்பதாக நூலகப் பொறுப்பாளர் ஐயமற உணர்வாராயின் அத்தகைய புத்தகத்தை அல்லது அப்புத்தகம் எத்தொகுதியைச் சேர்ந்ததோ அத்தொகுதியை இரவல் பெற்றவர் உடனடியாகப் பிரதியீடு செய்தல் வேண்டும் அல்லது அதன் பெறுமதியையோ அல்லது மாநகர முதல்வர் விதிப்படி முறையெனக் காணும் வேறு அபராதத்தையோ செலுத்தல் வேண்டும். அதனைச் செலுத்தாது மறுக்கும் அல்லது புறக்கணிக்கும் சந்தர்ப்பத்தில் அத்தகைய பெறுமதி சட்ட நடவடிக்கை மூலம் செலவுகளுடன் அறவிடப்படும். ஊனப்படுத்தப்பட்ட ஒன்றை பிரதியீடு செய்தற்காக ஒரு புத்தகத்தின் புதிய பிரதியொன்று அல்லது புத்தகங்களின் தொகுதி ஒன்று மீண்டும் வாங்கி வைக்கப்படுகையில் அல்லது அதற்காகப் பணஞ் செலுத்தப்படுகையில், அங்ஙனம் மீண்டும் வாங்கியளிப்பவர் அல்லது பணங்கட்டுபவர், பழுதுற்ற பிரதியில் " பொது நூலகம்...... பழுதுற்றதால் விற்கப்பட்டது " என முத்திரையிடப்பட்ட பின்னர் அதனைப் பெறுதற்குப் பாத்தியதையுள்ளவராவார்.

19. (1) இரவல் தரும் நூலகத்திலிருந்து தாம் இரவலாகப் பெற்ற புத்தகமெதனையும் எவ்வுறுப்பினரும் வேறு எவருக்கேனும் இரவல் கொடுத்தல் கூடாது.

(2) எவ்வுறுப்பினரேனும் (1) ம் பந்தியின் ஏற்பாட்டை மீறி நடப்பின் அவர் தமது கட்டுப்பணத்தையிழப்பதுடன், இரவல் தரும் நூலகத்தின் உறுப்பினராகவிருப்பதிலிருந்து விலக்கப்படுவார்.

20. தொற்றுநோய் அல்லது ஒட்டுநோயால் அழுந்தும் எவராலேனும் உபயோகிப்பட்டதெனத் தாம் அறிந்த எப்புத்தகத்தையும் உறுப்பினரெவரும் இரவல் தரும் நூலகத்துக்குத் திருப்பிக்கொடுத்தலாகாது. அத்தகைய புத்தகம் அழிக்கப்படுவதோடு, அவ்வுறுப்பினர் அப்புத்தகத்தை மீண்டும் வாங்கி வைப்பதற்கான செலவையோ அல்லது அப்புத்தகம் எத்தொகுதிக்குரியதோ அப்புத்தகத் தொகுதியையோ, அல்லது பெறுமதியையோ நூலகப் பொறுப்பாளரின் உசிதப்படி, நூலகப் பொறுப்பாளரிடம் கொடுக்க வேண்டும்.

21. ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை எவர் இரவலாகப் பெற வேண்டும் என்பதையிட்டு இரவல் தரும் நூலகத்தின் உறுப்பினர் இருவர் அல்லது பலருக்கிடையில் பிணக்சேற்படுகையில் அத்தகைய பிணக்கை நூலகப் பொறுப்பாளர் தீர்த்துவைக்கவேண்டும்.

22. வேறொரு உறுப்பினர் ஏற்கனவே இரவலாகப் பெற்றுள்ள புத்தகமெதையும் தாமும் இரவலாகப் பெறவிரும்பும் எவ்வுறுப்பினரும், அத்தகைய கருமத்துக்காக வைக்கப்பட்டிருக்கும் ஒரு பதிவேட்டில் தமது பெயரையும், அப்புத்தகத்தின் தலைப்பையும் எழுதவேண்டும்; அப்புத்தகத்தை இரவல் பெற்றிருந்த உறுப்பினர் திருப்பித் தந்ததும், நூலகப் பொறுப்பாளர் பதிவேட்டில் தமது பெயரை எழுதியுள்ள உறுப்பினருக்கு அதனைக் கொடுத்தல் வேண்டும். எப்புத்தகத்துக்காவது இரு அல்லது பல உறுப்பினர்கள் தமது பெயரைப் பதிவேட்டில் எழுதியிருக்குமிடத்து அவர்கள் தமது பெயரைப் பதிவேட்டில் எழுதியுள்ள ஒழுங்கின்படி அப்புத்தகங்கள் அவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

23. 6 (1) (ஈ) ஆம் துணைவிதியின் பிரகாரம் எவராவது செலுத்திய கட்டுப்பணம், அவரிடமிருந்து இரவல் தரும் நூலகத்துக்கு வருமதியான தொகையேதுமிருப்பின் அதனைக் கழித்தபின்னர், அவர் ஒரு உறுப்பினராகவிருப்பதிலிருந்து விலகும்பொழுது திருப்பிக்கொடுக்கப்படும்.

## ஆதார நூலகம்

24. (அ) நூலகப் பொறுப்பாளரிடமிருந்து அதற்காக அனுமதி பெற்றிருந்தாலன்றியும் ;

(ஆ) ஆதார நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டில் ஒப்பமிட்டிருந்தாலன்றியும் ;

எவரும் ஆதார நூலகத்தைப் பிரயோசனப்படுத்தலாகாது.

25. ஆதாரங்காணும் நோக்கத்திற்காகத் தமக்குக் கொடுக்கப்பட்ட புத்தகமெதையும் அல்லது ஆதார நூலகத்தில் திரட்டி வைக்கப்பட்டிருக்கும் தொகுப்பின் ஒரு பாகமாகவமைந்துள்ள வேறு புத்தகமெதையும் அல்லது அதன் பகுதியை அல்லது துண்டுப்பிரசுரம், காலாந்தரப்பத்திரிகை படம், ஓவியம், செதுக்கம், ஊர்ப்படம், விளக்கப்படம், மாதிரிப்படம் கையெழுத்துப் பிரதி பத்திர சாதனம் அச்சுப்பிரதி அல்லது புதினத்தாள் எதனையும் எவரும் ஆதார நூலகத்துக்கு வெளியே கொண்டு செல்லலாகாது.

## வாசிகசாலை

26. (அ) நூலகப் பொறுப்பாளரிடமிருந்து அதற்காக அனுமதி பெற்றிருந்தாலன்றியும் ;

(ஆ) வாசகசாலையில் வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டில் ஒப்பமிட்டிருந்தாலன்றியும் ;

எவரும் வாசகசாலையைப் பிரயோசனப்படுத்தலாகாது.

27. வாசகசாலையில் வைக்கப்பட்டுள்ள அல்லது வாசகசாலைக்குரிய புதினத்தாள், காலாந்தரப்பத்திரப்பத்திரிகை, சஞ்சிகை, ஊர்ப்படம், பத்திரசாதனம், கையெழுத்துப்பிரதி, அச்சுப்பிரதி, மாதிரிப்படம், விளக்கப்படம், ஓவியம், செதுக்கம், துண்டுப்பிரசுரம் அல்லது வேறு எப்பொருளையும் எவரும் வாசகசாலையிலிருந்து அகற்றலாகாது.

### பொது

**28.** ஒட்டுநோய், தொற்றுநோய் அல்லது சரும நோய் ஏதனுலேனும் அழுந்தும் அல்லது சமீபகாலத்தில் அழுந்திய அல்லது அத்தகைய நோயினுல் அழுந்தும் எவருக்கும் சமீபகாலத்தில் பணிவிடை செய்த எவரும் நோய் தொற்றுங் காலவெல்லேயும், காத்தற்காலவெல்லேயும் கழியும்வரை பொது நூலக மனையினுள் பிரவேசித்தலாகாது.

**29.** எவரும்—

(1) பொது நூலகமனையினுள்ளோ அல்லது அதன் சாரலிலோ எவ் வகையினும் ஒழுங்கீன முறையில் நடந்துகொள்ளவோ அல்லது ஏதேனும் தொந்தரவு உண்டுபண்ணவோ கூடாது.

(2) பொது நூலகக் கட்டடத்தின் எப்பாகத்தையுமோ அல்லது அத னுள் அல்லது அதன் சாரலிலுள்ள காலி மாநகர சபையின் ஆதனங்களில் எதையும் பழுதுபடுத்தவோ அல்லது அசங்கீதப் படுத்தவோ கூடாது.

(3) தான் இன்னர் என்பதற்கு அல்லது தான் அங்கு தங்கியிருப்ப தற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கங்கள் தரவியலாது, பொது நூலகம் மூடப்பட்டபின்னர் நூலகமனையகத்துள் பிர வேசிக்கவோ அங்கு தங்கியிருக்கவோ அல்லது சோம்பித்திரி யவோ கூடாது.

(4) பொது நூலக மனையகத்துள் புகைபிடிக்கவோ அல்லது துப்பவோ கூடாது.

(5) பொது நூலகமனையகத்துள் தாயக்கட்டைகள் அல்லது சீட்டுகள் கொண்டு சூது விளையாடவோ அல்லது வேறு விளையாட்டுகளேனும் விளையாடவோ கூடாது.

(6) பொது நூலகத்தினுள்ளிருந்து கொண்டு கூச்சல் போட்டு அல்லது பாட்டுகள் பாடி அல்லது வேறேதும் சத்தஞ் செய்து அந்நூல கத்தை உபயோகப்படுத்துபவர்களை தொந்தரவு படுத்தக்கூடாது.

(7) அசுத்தமான அல்லது அலங்கோலமான முறையில் உடையுடுத் துக்கொண்டு பொது நூலகமனையகத்துள் பிரவேசித்தல் கூடாது.

(8) பொது நூலமனையகத்துள் நாய் அல்லது வேறு மிருகமெதனை யும் கொண்டு வருதல் கூடாது.

(9) பொது நூலகத்தின் எப்பாகத்திலாயினும் உறங்கவோ அல்லது எவ்வுணவையும் உட்கொள்ளவோ கூடாது.

(10) பொது சனங்களின் புழக்கத்துக்கென ஒதுக்கப்படாத நூலகத்தின் எப்பாகத்திலும் புகவோ அல்லது தரித்திருக்கவோ கூடாது.

(11) தொப்பிகள், குடைகள், கைத்தடிகள், பைகள், பொதிகள் அல்லது வேறு எப்பொருளையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற் குப் பொறுப்பு எதுவும் சாட்டக்கூடாது. அத்தகைய பொருட் களின் பாதுகாப்பு இரவல் பெறுபவர் அல்லது வாசகரின் சொந்தப் பொறுப்பிலேயே இருக்கவேண்டும்.

(12) நூலகத்திலடங்கியுள்ளவற்றின் ஒரு பாகமாகவுள்ள புத்தகம் அல்லது பத்திர சாதனம் எதையும் அல்லது அதினும் வேண்டு மென்றோ அல்லது கவனயீனமாகவோ அல்லது உதாசீன மாகவோ அழுக்காக்கவோ கிழிக்கவோ, வெட்டவோ, அசங்கீத மாக்கவோ, எழுதவோ, பழுதாக்கவோ, ஊனப்படுத்தவோ அல் லது அழிக்கவோ அல்லது நூலகத்தின் எப்பாகத்தையும் அல்லது அதிலுள்ள எச்சொத்தையும் தளவாடங்களையும் அல்லது துணைக்கருவிகளையும், தவருன முறையில் பயன்படுத்தவோ, கவனயீனமாகவோ அல்லது உதாசீனமாகவோ அழுக்காக்கவோ அல்லது ஊனப்படுத்தவோ அல்லது உடைக்கவோ கூடாது.

(13) நூலகப் பொறுப்பாளரையோ அல்லது நூலகப் பொறுப்பாளரின் ஆணைப்படி கருமமாற்றும் எவரையுமோ, இத்துணைவிதிகளின் படியான அவரது கடமையைச் செய்யவிடாது தடுக்கக்கூடாது.

**30.** நூலக மனையகத்துள்—

(அ) ஒழுக்கக்கேடான முறையில் நடந்துகொள்ளும்,

(ஆ) ஆவேசமான, அவதூருன அல்லது ஆபாசமான வார்த்தைகளைப் பேசும்,

(இ) பந்தயங்கள் கட்டும் அல்லது சூதாடும், அல்லது எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னரும் நூலகத்தை மூடுதற்குக் குறிக்கப்பட் டுள்ள நேரங்கடந்தும் விடாப்பிடியாக அங்கு தங்கிநிற்கும் அல்லது நூலகத்தைப் பயன்படுத்த அருகதையற்றவராகவிருக்கும் அல் லது தொற்றுநோய் அல்லது அருவருப்பான ஒரு நோயினுல் அழுந்தும் எவரையும் நூலக அதிகாரத்தைச் சேர்ந்த உத்தி யோகத்தர் அல்லது ஊழியர் ஒருவர் வெளியேற்றலாம் அல்லது அப்புறப்படுத்தலாம்.

**31.** நூலகப் பொறுப்பாளரின் கடமைநேரம் 6½ மணித்தியாலங் களுக்கும், பகலுணவுக்கான இடைவேளை ஒரு மணித்தியாலத்துக்கும் மேற்படலாகாது.

**32.** 19 ம், 25 ம், 27 ம், 28 ம், 29 ம், 30 ம் துணைவிதிகள் ஒவ்வொன் றையும் மீறும் செயல் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத அபராதமொன்றி னுல் தண்டிக்கப்படக்கூடியதாகவுருக்கும்.

**33.** இத்துணைவிதிகளில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி "நூலகப் பொறுப்பாளர்" எனும் வாசகம் உள்ளூராட்சிச் சேவை ஆணைச் சபையினுல் நூலகத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட ஒருவர் எனப் பொருள்படுவதோடு அவரது உதவியாளர்களையும் உட்படுத்தும்.

3–12—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### தலுகமைப் பட்டினசபை

*பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்*

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் தலுகமைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினுல் தமக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டலு வல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பீ. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க, நிருவாக, உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973.2.13.

### துணைவிதி

*மலகூட வேலை*

சபையினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத்துணைவிதிகளின் XIX ம் பாகத்தின் 6 ம் துணைவிதியின் நோக்கத்துக்காக, சபைக்கு மாதாந்தம் செலுத்தப்பட வேண்டிய மலகூடக் கட்டணம், சுத்தம்செய்யப்படும் ஒவ்வொரு மலகூட வாளிக்கும் இரண்டு ரூபா வீதமாயிருத்தல்வேண்டும்.

3–13—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### துணைவிதிகள்

*கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்*

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ், பதுளை மாவட்டத்திலுள்ள தென்னகும்புற கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினுல் ஆக்கப்பட்டு அப்பிரிவினுல் தமக் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூ ராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பீ. சிறிவர்த்தன,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 19 ந் உ.

### துணைவிதி

சபையினுல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தண்ணீர்ச் சேவை சம்பந்தமான நியமத் துணைவிதிகள் தென்னகும்புற கிராமச்சபைக்கு ஏற்புடைத்தாகும் அளவுக்கு, 27 (2) ம் துணைவிதிக்கு நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது :

"(3) சபையால் நிறுவப்பட்டுள்ள தண்ணீர்ச் சேவையிலிருந்து ஒரு தனியார் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் வளவின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் முறைப்படி அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதன் மேல் சொல்லப்பட்ட தண்ணீர்ச் சேவையிலிருந்து தண்ணீர் பெறும் ஒவ்வொரு மாதம் தொடர்பாகவும் ஏதேனும் வியாபார நோக்கத்துக் காகத் தண்ணீர் உபயோகிக்கப்படுமிடத்து அத்தகைய வளவில் பொருத்தப்பட்டுள்ள ½ அங்குல வடிகுழாய் ஒவ்வொன்றுக் காக 5 ரூபாவும் ஏதேனும் வீட்டு நோக்கத்திற்காகத் தண்ணீர் உபயோகிக்கப்படுமிடத்து முதல் ½ அங்குல வடிகுழாய்க்கு 5 ரூபாவும் மேலதிகமான வடிகுழாய் ஒவ்வொன்றிற்கும் 2 ரூபா 50 சதக் கட்டணமும் செலுத்தல் வேண்டும்."

3–171—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

# நானாவித அறிவித்தல்கள்

## ஏறுவூர் பட்டின சபை

கசாப்புக்காரர் கட்டளைச் சட்டம்

கசாப்புக்காரர் கட்டளைச் சட்டத்தின் 272 ம் அத்தியாயத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் அட்டவணையில் காணப்படும் பேர்வழிக்காரர்களிடமிருந்து 1973 ம் ஆண்டுக்கு கசாப்புத் தொழில் நடாத்த அனுமதி வழங்கும்படி கோரும் விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றது. இந்தப் பட்டின சபை இடப்பரப்பிற்குள் வசிப்போர் எவரேனும் இங்கு குறிப்பிட்ட அனுமதி வழங்குவதை மறுக்க விரும்பினால் மறுப்பிற்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளில் எமக்கு அனுப்பி வைக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றனர்.

பட்டின சபை அலுவலகம்,
ஏறுவூ , 13.02.73

எம். ஏ. சி. ஏ. றகுமான்,
தலைவர்,
பட்டின சபை, ஏறுவூர்.

அட்டவணை

| விண்ணப்பக்காரரின் பெயரும் விலாசமும் | வியாபாரம் செய்ய இருக்கும் இடம் |
|---|---|
| 1. எம். நெயினாமுகமது, பெண்பாடசாலை வீதி, ஏறுவூர், 3 | புதிய சந்தை, ஏறுவூர், 2 |

3–48—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

## ஏறுவூர் பட்டினசபை

1973 ம் வருடத்திற்கான சோலைவரி இடாப்புக்கள்

மாநகரசபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 252) 235 (1) ம் பிரிவின் படியும், பட்டினசபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 256) 165 ம் பிரிவின்படி, ஏறுவூர் பட்டினசபையின் 1973 ம் ஆண்டிற்குரிய சோலைவரி இடாப்புகள் தற்பொழுது தயாராகவுள்ளன என்பதையும், அவற்றை அலுவலக நேரங்களில் பொதுமக்கள் பார்வைக்காக பட்டின சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். ஏ. சி. ஏ. றகுமான்,
தலைவர்,
பட்டினசபை, ஏறுவூர்.

பட்டினசபைக் காரியாலயம்,
ஏறுவூர், 9.2.73.

3–45—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

## தோப்பூர் கிராமசபை

இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டம்

இறைச்சிக்கடைக்காரர் பற்றிய கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) பிரிவு 7 ன் தாற்பரியப்படி இதன்கீழ்க் காணப்படும் அட்டவணையிற் காணப்பவர்களிடமிருந்து 1973 ம் ஆண்டுக்கு அட்டவணையிற் குறிப்பிட்ட இடத்தில் குறித்த தன்மைத்தாய வியாபாரம் செய்ய உத்தரவு தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும், குறித்த நபர்களுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்குவதை மறுக்க விரும்பினால், அம்மறுப்புக்கான காரணங்களை இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து பதினன்கு நாட்களுக்குள் இணைப் பிரதிகளில் எழுத்துமூலம் எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அட்டவணை

| விண்ணப்பகாரர் பெயர் | வியாபாரத்தின் தன்மை | இடம் |
|---|---|---|
| 1. மு. த. குப்பைத்தம்பி .. | மாட்டிறைச்சிக்கடை .. | தோப்பூர் சந்தை |
| 2. கா. நெ. ஐத்துரூஸ் .. | ஆட்டிறைச்சிக்கடை .. | தோப்பூர் சந்தை |

இ. முஸ்தாப,
தலைவர்,
கிராமசபை, தோப்பூர்.

கிராமசபை அலுவலகம்,
தோப்பூர்,
25.1.73.

3–90—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

## மூள்ளிப்பொத்தானை கிராம சபை

உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நியமத் துணைவிதிகள்) சட்டம் (அத்தியாயம் 261)

உள்ளூரதிகாரத் தாபனங்கள் (நிலையான உப விதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் கீழ் திருகோணமலை மாவட்டத்து மூள்ளிப்பொத்தானை கிராம சபைப் பிரதேசத்தின் கிராம சபையினால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1953 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 10 ம் திகதியின் 10,517 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1953 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 7 ஆம் திகதியின் 10,560 ஆம் இலக்க வர்த்தமானியில் அவ் அங்கீகாரம் பிரசுரிக்கப்பட்ட நிலையான உப விதிகளின் 1 தொடக்கம் 37 முடியவுள்ள பாகங்களையும், உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1963 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதியின் 13,679 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு தை மாதம் 8 ஆம் திகதியின் 14,287 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அதே நிலையான உப விதிகளின் 38 ஆம் பாகத்தையும் உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டு யூலை மாதம் 8 ஆம் திகதியின் 14,703 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு 1969 ஆம் ஆண்டு தை மாதம் 3 ஆம் திகதியின் 14,835 ஆம் இலக்க வர்த்தமானியில் அவ் அங்கீகாரம் பிரசுரிக்கப்பட்ட அதே நியமத்துணைவிதியின் 39 ஆம், 40 ஆம், 41 ஆம் பாகங்களையும், இத் தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று மூள்ளிப்பொத்தானை கிராமசபை உள்ளூரதிகாரத் தாபனங்கள் நிலையான் உப விதிகளின் சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் இத்தால் தீர்மானிக்கிறது.

வை. அப்துல் ஜபார்,
தலைவர்,
மூள்ளிப்பொத்தானை கிராமச் சபை.

மூள்ளிப்பொத்தானை கிராம சபை அலுவலகம்,
மூள்ளிப்பொத்தானை,
1972 ம் ஆண்டு கார்த்திகை மீ 15 ந் உ.

3–17—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

### மேற்குமூலைக் கிராமச் சபை

இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 257 ம் அத்தியாய சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணும் அட்டவணையில் காணப்படுபவரிடமிருந்து 1973 ம் ஆண்டுக்கு கசாப்புத் தொழில் நடாத்துவதற்கு அனுமதிதரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றன. இந்தக் கிராமச் சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்படும் அனுமதி கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுப்பிற்கான காரணங்களை இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினைந்கு நாட்களுக் கிடையில் இணைப் பிரதிகளில் எமக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

| விண்ணப்பகாரரின் பெயரும் விலாசமும் | வியாபாரத் தன்மை | இடம் |
|---|---|---|
| மடு நிர்வாகஸ்தர், மடுக்கோவில் .. | ஆடு, மாடு இறைச்சி | மடுக்கோவில் |

ச. வயிரவநாதர்,
கி. ச. அக்கிராசனர்.

கிராமச்சபைக் காரியாலயம்,
மேற்குமூலை,
இரணைஇலுப்பைக்குளம்,
30.1.73.

3–426—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### பனிக்கட்டி குறிப்பு கிராமச்சபை

இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் காண்பவரிடமிருந்து 1973 ம் ஆண்டிற்கு இறைச்சிக் கடைக்கு அனுமதி தரும்படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இந்தக் கிராமச் சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் அனுமதி கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுப்புக்கான காரணங்களை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினைந்கு தினங்களுள் இணைப் பிரதியாக எம்க்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பக்காரர் | விலாசம் | வியாபரம் செய்யுமிடம் |
|---|---|---|
| மஸ்தான் முகம்மது இபுருகீம்.. | பன்குளம் | 1 ம் வட்டாரம், பன்குளம், சந்தைவளவு |

சி. க. நடராசா,
தலைவர்,
பனிக்கட்டிமுறிப்பு கிராமச்சபை.

கிராமச்சபை அலுவலகம்,
பன்குளம்.

3–397—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### அக்கரைப்பற்று வடக்கு கிராமச் சபையின் இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இல. திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் பின் கானும் அட்டவணையிற் காண்போர்களிடமிருந்து 1973 ம் ஆண்டின் புச்சர் லைசென்ஸ் தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இக்கிராமச்சபை இடப்பரப்பில் வதிவோர் எவரேனும் குறிக்கப்படும் நபர்களுக்கு லைசன்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினுல், மறுப்பிற்கான காரணங்களை இக்கெசெட்டில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப்படுகிறது.

அட்டவணை

| விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | இறைச்சி வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|
| 1. மீராலெவ்வை இஸ்மாயில் .. | 1 ம் வாட் ஒலுவில் | .. ஒலுவில் |
| 2. கன்நெயிந்தை மரைக்கார் முகம்மது அனிபா | 2 ம் குறிச்சி, அட்டாளைச்சேனை | .. 1 ம் குறிச்சி, அட்டாளைச்சேனை |
| 3. எஸ். எல். எம். அப்துல்குத்தூஸ் .. | 4 ம் குறிச்சி, அட்டாளைச்சேனை | .. 2 ம் குறிச்சி, அட்டாளைச்சேனை |
| 4. ஏ. எம். இப்ருலெவ்வை .. | 4 ம் குறிச்சி, அட்டாளைச்சேனை | .. 3 ம் குறிச்சி, அட்டாளைச்சேனை |
| 5. சின்னலெவ்வை முகம்மது இஸ்மயில் .. | 4 ம் குறிச்சி, அட்டாளைச்சேனை | .. 4 ம் குறிச்சி, அட்டாளைச்சேனை |

ஏ. அகமதுலெவ்வை,
கி. ச. தலைவர்,
அக்கரைப்பற்று வடக்கு.

கி. ச. காரியாலயம்,
அட்டாளைச்சேனை,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 1 ந் உ.

3–534—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

---

### அக்கரைப்பற்று தெற்கு கிராம சபை

கசாப்புக்காரர் கட்டளைச் சட்டம்

கசாப்புக்காரர் கட்டளைச் சட்டத்தின் 272 ம் அத்தியாயத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் அட்டவணையில் காணப்படும் பேர் வழிக்காரர்களிடமிருந்து 1973 ம் ஆண்டுக்கு கசாப்புத் தொழில்நடாத்த அனுமதி வழங்கும்படி கோரும் விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

அக்கரைப்பற்று தெற்கு கிராம சபை இடப்பரப்பிற்குள் வசிப்போர் எவரேனும் இங்கு குறிப்பிட்ட அனுமதி வழங்குவதை மறுக்கவிரும்பினுல் மறுப்பிற்கான காரணங்களை இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப் பிரதிகளில் எமக்கு அனுப்பி வைக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றனர்.

அட்டவணை

| விண்ணப்பகாரரின் பெயரும் விலாசமும் | செய்ய விரும்பும் தொழில் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|
| 1. சாமித்தம்பி கனகரெத்தினம் கள்ளியந்தீவு, திருக்கோயில் | பன்றியிறைச்சி | சந்தை சதுக்கம் தம்பிலுவில் |
| 2. கணபதிப்பிள்ளை தங்கவேல் திருக்கோயில் .. | பன்றியிறைச்சி | சந்தை துக்கம் தம்பிலுவில் |

நடராசா தர்மலிங்கம், ஜே.பி,
அக்கிராசனர்,
அக்கரைப்பற்று தெற்கு கி. ச.
தம்பிலுவில்.

கிராமசபை,
அக்கரைப்பற்று தெற்கு,
தம்பிலுவில்.
1973 ம் ஆண்டு பெப்ருவரி மீ 6 ந் உ.

3–712/1—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

**அக்கரைப்பற்று தெற்கு கிராமச் சபை**

வாகன மிருக வரி 1973 ம் ஆண்டு

கிராம சபை கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 257) இத்தால் அறிவிக்கப்படுவதாவது, அக்கரைப்பற்று தெற்கு கிராமச் சபை,

(அ) கிராமச் சபைகளின் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 39 ம் பிரிவின் கீழ் 1973 ம் ஆண்டிற்கு வாகன மிருக வரியாக கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதமும்,

(ஆ) இச் சட்டத்தின் 39 (6) ம் பிரிவின் கிழ் இவ்வரிகள் கட்டப்பட வேண்டிய கடைசித் திகதி 1973 ம் ஆண்டு பங்குனி மாதம் 31 ந் திகதியாகும்.

**அட்டவணை**

ஒவ்வொரு துவிச்சக்கர வண்டிக்கும், முச்சக்கர வண்டிக்கும்,

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | வர்த்தகம் சம்பந்தமாகப் பாவிக்கப்பட்டால் .. | 2 00 |
| 2. | வர்த்தகம் சம்பந்தமாகத் தவிர்ந்த வேறுவகையில் பாவிக்கப்பட்டால் .. .. | 1 00 |
| | ஒவ்வொரு ஒற்றை மாட்டு வண்டிக்கும் .. .. | 2 50 |
| | ஒவ்வொரு இரட்டை மாட்டு வண்டிக்கும் .. .. | 4 00 |

3–712/2—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

**அக்கரைப்பற்று தெற்கு கிராம சபை**

கிராம சபைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 257)

இத்தால் அறிவிப்பதாவது அக்கரைப்பற்று தெற்கு கிராம சபைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 38 ம் பிரிவின் கீழ் தீர்மானித்திருப்பதாவது ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரமாகும் திகதியிலிருந்து,

பின்னால் குறிப்பிட்டுள்ள அனுபந்தம் பகுதி 1, 2, 3, 4 ம் ஆகிய வற்றிற்கு வியாபார வர்த்தகத் தொழில் முறை வரிப்பணம், அல்லது அனுமதிப் பத்திர வரிப்பணம், அவற்றிற்கெதிரே குறிப்பிட்ட தொகையாயிருக்கும். இதற்கு முன் நடைமுறையிலிருந்து வந்த தொகைகள் இத்தால் ரத்துச் செய்யப்படுகின்றன.

**அட்டவணை**

பகுதி I

அபாயகரமான வர்த்தகம்: (1954 , சித்திரை 23 ந் திகதிய 10,665 வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது போல்)

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | செங்கற் சூளை .. .. | 30 00 |
| 2. | தும்பு தயாரித்தல் அல்லது சேகரித்தல் | 10 00 |
| 3. | கொல்லுலை மட்பாண்டப் போறணை .. | 10 00 |
| 4. | மரக் காலை வைத்திருக்க .. | 10 00 |
| 5. | அரிசாலை வைத்திருக்க .. .. | 150 00 |
| 6. | சுண்ணும்பு சுடுதல் .. .. | 20 00 |
| 7. | பாணி தயாரித்தல் .. .. | 10 00 |

பகுதி 2

தண்டனைக்குரிய வர்த்தகங்கள்

| | | |
|---|---|---|
| 1. | கருவாட்டுக்கடை .. .. | 10 00 |
| 2. | பலசரக்குக் கடை .. .. | 5 00 |
| 3. | மீனுக்கு ஐஸ் போடுமிடம் .. | 25 00 |
| 4. | மரத் தளபாடம் உற்பத்தி செய்தல் .. | 10 00 |
| 5. | சேர்க்கை உரம் சேகரிப்பு நிலையம் .. | 25 00 |
| 6. | புகையிலை பதனிடல் .. .. | 10 00 |
| 7. | பீடி சுருட்டு சுற்றுதல் .. | 15 00 |
| 8. | கொப்பரு தயாரித்தல் .. | 25 00 |
| 9. | கொப்பரு சேகரித்தல் .. .. | 25 00 |
| 10. | வைக்கோல் சேமித்தல் .. .. | 10 00 |
| 11. | ஆபரணம் செய்தல் .. .. | 10 00 |

பகுதி 3

அபாயகரமான தண்டனைக்குரிய வர்த்தகங்கள்

| | | |
|---|---|---|
| 1. | செங்கல் அல்லது ஓடு சுடுதல் .. | 30 00 |
| 2. | வாகனங்கள் திருத்துமிடம் .. | 30 00 |
| 3. | பெற்றோல் செற் .. .. | 30 00 |
| 4. | றெடியோ விற்றல் அல்லது திருத்துதல் | 25 00 |
| 5. | இரசாயனப் பொருட்கள் விற்றல் .. | 10 00 |

பகுதி 4

மற்றைய வியாபாரங்கள் :

| | | |
|---|---|---|
| 1. | பாற்பண்ணை வைத்திருத்தல் .. | 10 00 |
| 2. | தனிப்பட்ட இறைச்சிக் கடை .. | 15 00 |
| 3. | சிகையலங்காரக் கடை .. .. | 5 00 |
| 4. | சலவைக் கடை .. .. | 5 00 |
| 5. | ஆட்டிறைச்சிக் கடை .. .. | 25 00 |
| 6. | மரக்கறிக் கடை .. .. | 5 00 |
| 7. | மீன் கடை (சந்தைக்கு வெளியே) .. | 10 00 |
| 8. | ஐஸ் கொண்டு திரிந்து விற்றல் .. | 2 00 |
| 9. | பாண் போறணை .. .. | 20 00 |
| 10. | சாப்பாட்டுக் கடை .. .. | 20 00 |
| 11. | தேனீர் கோப்பிக் கடை .. | 10 00 |
| 12. | அரிசி ஆலை ( 2 ந் தரம்) .. | 35 00 |
| 13. | மா அரிக்கும் ஆலையும் அரிசியாலையும் | 40 00 |
| 14. | பாற்கடை, அல்லது தயிர் நெய் எடுக்குமிடம் | 25 00 |
| 15. | பலசரக்குக் கடை தரம் 1. .. | 50 00 |
| 16. | பலசரக்குக் கடை தரம் 2 .. | 10 00 |
| 17. | இரும்புக் கடை .. .. | 10 00 |
| 18. | கைத்தறியல்லாத பிடவை விற்பனை நிலையம் | 10 00 |

நடராசா தர்மலிங்கம், ஜே. பி.
அக்கிராசனர்,
அக்கரைப்பற்று தெற்கு கிராம சபை.

கிராம சபை அலுவலகம்,
அக்கரைப்பற்று தெற்கு,
தம்பிலுவில்.
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 06 ந் வ.

3–712/3—02.03.73 ந் திகதிய வர்த்தமானி இல. 49

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# "ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி (கெசற்)"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ரறுல்" கையொப்பமிடப் பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | .. | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | | .. | .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | .. | .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | | .. | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம் கொழும்பு அவர்கட்கு சகல அறிவித் தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்குவரும் :—

| ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | | | | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் | .. | .. | .. | 46 | 0 | .. | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு | .. | .. | .. | 36 | 0 | .. | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் | | .. | .. | 43 | 50 | .. | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | | விலை ரூ. ச. | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் ஒவ்வொரு பகுதியும் | .. | .. | 0 50 | .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் | .. | .. | 1 0 | .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | | .. | 0 30 | .. | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | | .. | 0 60 | .. | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

அட்டவணை

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மாச்சு .. | 2. 3.73 | வெள்ளி .. | 23. 2.73 | வெள்ளி .. | ந. ப 12.00 |
| | 9. 3.73 | வெள்ளி .. | 2. 3.73 | வெள்ளி .. | ந. ப 12.00 |
| | 16. 3.73 | வெள்ளி .. | 9. 3.73 | வெள்ளி .. | ந. ப. 12.00 |
| | 23. 3.73 | வெள்ளி .. | 16. 3.73 | வெள்ளி .. | ந. ப. 12.00 |
| | 30. 3.73 | வெள்ளி .. | 23. 3.73 | வெள்ளி .. | ந. ப. 12.00 |
| ஏப்பிறல் . | 6. 4.73 | வெள்ளி .. | 30. 3.73 | வெள்ளி .. | ந. ப. 12.00 |
| | 11. 4.73 | புதன் .. | 6. 4.73 | வெள்ளி .. | ந. ப. 12.00 |
| | 19. 4.73 | வியாழன் .. | 11. 4.73 | புதன் .. | ந. ப. 12.00 |
| | 27. 4.73 | வெள்ளி .. | 19. 4.73 | வியாழன் .. | ந. ப. 12.00 |

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.